

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,நேற்று (23.6.2025) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் சார்பில் சி.ஐ.டி குடியிருப்பு முதல் தெருவில் 3.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 113 தெருக்களில் வாழும் 50,000 பொதுமக்கள் பயன் பெறும் வகையில் 6.25 எம்.எல்.டி செயல்திறன் கொண்ட H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய சாலையோர கழிவு நீர் உந்து நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் டி.ஜி.வினய், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சி துணைத் தலைவர் ARPM காமராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி வே. கமலா செழியன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 99ஆவது பிறந்தநாள் : இன்று

# கவியரசு கண்ணதாசன் திருவுருவச் சிலைக்கு மாலை!

## அமைச்சர்கள் அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்!

சென்னை,ஜூன்.24-

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 99ஆவது பிறந்த நாள் - ஜூன் 24 அன்று அமைச்சர் பெருமக்கள் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், கவியரசு கண்ணதாசன் அவர்களின் 99 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது பெருமைகளைப் போற்றி அமைச்சர் பெருமக்கள், 24.6.2025 அன்று காலை 9.30 மணியளவில் சென்னை, தியாகராய நகர், கோபதி நாராயண சாலையில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகேயுள்ள சிறுகூடல் பட்டியில் சாத்தப்பன்-விசாலாட்சி தம்பதியருக்கு மகனாக 24.6.1927 அன்று பிறந்தார். இவரின் இயற்பெயர் முத்தையா. சிறுகூடல்பட்டி பள்ளியில் ஆரம்பக் கல்வியும், அமராவதி புதூரில் பள்ளிப் படிப்பையும் பயின்றார்.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் தமது இளமைப் பருவத்தில் எழுத்தாற்றலில் மிகுந்த ஆர்வமும், புத்தகங்களை வாசிப்பதில் அதிக நாட்டமும் கொண்டிருந்தார். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். கண்ணதாசன் கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர், பெரும்புலவன் பாரதியாரை மானசீகக் குருவாக ஏற்றுக் கொண்டவர்.

கவியரசு கண்ணதாசன் கவிதைகள், இலக்கியம், சிறுகதைகள், நாடகங்கள் போன்றவற்றில் தனித்தன்மையோடு சிறந்து விளங்கினார். திருமகள், திரை ஒலி, மேதாவி, சண்டமாருதம், தென்றல், கண்ணதாசன் மாத இதழ், கடிதம் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்துள்ளார். இவர் படைத்த இலக்கியங்களில் மாங்கனி, ஆட்டனத்தி - ஆதிமந்தி, கவிதாஞ்சலி, தைப்பாவை, பாண்டிமாதேவி ஆகியவை மிகச் சிறந்து விளங்கிய காவியங்களாகும்.

மேலும், 20க்கும் மேற்பட்ட நவீனங்கள் மற்றும் கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். கவியரசு கண்ணதாசன் சிறப்பான கவிதைத் தொகுப்புகள் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவர் எழுதிய நாடகங்களில் அனார்கலி, சிவகங்கை சீமை, ராஜதண்டனை, அருணோதயம் ஆகியவை சிறந்த நாடகங்களாகத் திகழ்கின்றன. குறிப்பாக, அர்த்தமுள்ள இந்துமதம், இயேசு காவியம் ஆகியவை எண்ணற்ற வாசகர்களின் வரவேற்பைப் பெற்றவை.

கவியரசு கண்ணதாசன் அவர்களின் "அழகி" எனும் கவிதை ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகியவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத் திரைப்படத் துறையில் புகழ்பெற்ற திரைப்படப் பாடலாசிரியராகவும், சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார். திரைப்படத் துறையில் தனது முதற்பாடலை 'கன்னியின் காதலி' என்ற திரைப்படத்திற்கு எழுதினார். இதனைத் தொடர்ந்து 10க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு கதை வசனமும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப் படப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

1970 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு, மாநில அரசின் சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றார். 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் அரசவைக் கவிஞரானார். 1979 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்றார். தனது சிறப்பான பாடல்கள் மூலம் உலகிலுள்ள தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மறைந்தும் மறையாமல் நிலைத்த புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 24ஆம் நாள் அவருடைய பிறந்த நாளுக்குச் சிறப்புச் சேர்க்கின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா சென்னையிலும், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்று (24.6.2025) காலை கவியரசு கண்ணதாசன் பிறந்த நாளில், அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள். அவ்வமயம் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.813 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள்! ரூ.9.68 கோடியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன். 24-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.6.2025) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, சி.ஐ.டி குடியிருப்பு முதல் தெருவில் 3.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 113 தெருக்களில் வாழும் 50,000 பொதுமக்கள் பயன் பெறும் வகையில் 6.25 எம்.எல்.டி செயல்திறன் கொண்ட H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய சாலையோர கழிவு நீர் உந்து நிலையத்தை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு116க்குட்பட்ட டாக்டர் பெசன்ட் சாலையில் 9.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கை வசதியுடன் கட்டப்படவுள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனைக் கட்டடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

மேலும், வார்டு114, பங்காரு தெரு சென்னை நடுநிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 7 வகுப்பறைகள், 1 சமையலறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடத்தை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இராயபுரம் மண்டலம், வார்டு63, கொய்யாத் தோப்பு, கோமளீஸ்வரன் பேட்டை நாகப்பன் தெருவில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ், 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் 6 வகுப்பறைகளுடன் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தினையும் திறந்து வைத்தார்.

பின்னர், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 114க்குட்பட்ட லாக் நகரில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட முதல் தளத்தில் மேடையுடன் கூடிய பல்நோக்குக் கட்டடத்தினை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பொது மக்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் டி.ஜி.வினய், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி வே. கமலா செழியன், சிவராஜசேகரன், வட்டார துணை ஆணையர்கள் கே.ஜே.பிரவீன் குமார், கட்டா ரவி தேஜா, சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வேலூர் மாவட்டத்திற்கு வருகைதரும்

# கழகத்தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர், ஜூன். 24–

வேலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு சிறப் பான வரவேற்பு அளிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:–

தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவையும் தாண்டி உலக நாடுகள் பலவும் முற்போக்கு திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளை போற்றிடும் வகையில் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு நலத்திட்டங்களை தொலைநோக்கு சிந்தனையுடன் தீட்டி ஏட்டளவில் நின்று விடாமல் அதற்கான தேவையான நிதி ஆதாரங்களை ஒதுக்கி அனைத்து தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் தனது அயராத உழைப்பால் முன்னெடுத்து நிறைவேற்றி, மக்கள் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தாயுள்ளம் கொண்ட இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களை ஆளும் முதல்வர்களில் நாடு போற்றும் நல்லாட்சியாம் பொற்கால ஆட்சியை நடத்தி முதன்மை பெற்ற திராவிட மாடல் அரசின் முதல்வராகத் திகழும் முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி அவர்கள் 25.06.2025 புதன் அன்று சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாக புறப்பட்டு காட்பாடி ரயில் நிலையை சந்திப்பிற்கு முற்பகல் 11.00 மணிக்கு வருகை தருகிறார்.

இந்நிகழ்வினை தொடர்ந்து காட்பாடியில் கழக பொதுச்செயலாளர், தமிழ்நாடு அரசு நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களின் சார்பில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து வேலூர் கிரீன்சர்க்கிள் அருகில் வேலூர் மாநகர செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தலைமையில் சிறப்பான வரவேற்புக்கு பின் வேலூர் விருந்தினர் மாளிகைக்கு செல்ல உள்ளார்.

அதுசமயம் காட்பாடி ரயில் நிலையத்திலிருந்து வேலூர் விருந்தினர் மாளிகை வரை கழக இருவண்ண கொடி மற்றும் தோரணங்கள் அமைத்தும், வரவேற்பு வளைவுகளை அமைத்தும் ஒட்டுமொத்த வேலூர் மாவட்ட மக்களின் எழுச்சிமிகுந்த வரவேற்புடன் வரவேற்க மாவட்டதிற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்று கூடி வரவேற்பு அளித்திட உரிய முன்னேற்பாடுகளை முன்னெடுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

25.06.2025 புதன்கிழமை அன்று மாலை 05.00 மணி அளவில் வேலூர் மாவட்ட தி.மு.க., அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அணைக்கட்டு கெங்கநல்லூரில், நமது நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் திராவிடமாடல் அரசின் முன்னோடியும், சமத்துவ பெரியார் மற்றும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா ஆகியோர்களின் தம்பியாக இருந்து உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலையையும் அவரின் பெயரால் நிர்மானிக்கப் பட்டுள்ள கலைஞர் அறிவாலயத்தையும், வேலூர் மாவட்ட செயலாளர், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ஆகிய எனது தலைமையில் கழக பொதுச்செயலாளர், தமிழ்நாடு அரசு நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு அரசு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, மாவட்ட அவைத்தலைவர், கழக தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமதுசகி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் D.M.கதிர்ஆனந்த் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர், கழக மகளிர் அணி பிரச்சாரகுழு துணை செயலாளர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சிக்குழு, திட்டக்குழு தலைவர், அணைக்கட்டு மேற்கு ஒன்றிய செயலாளர் மு.பாபு, வேலூர் மாநகர மேயர் சுஜாதாஆனந்தகுமார், துணை மேயர் M.சுனில்குமார் ஆகியோர்களின் முன்னிலையிலும் திறந்து வைத்திட உள்ளார்.

எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வட்ட, வார்டு, ஊர் கிளை நிர்வாகிகள், கழக இந்நாள், முன்னாள் முன்னோடிகள் ஆகியோர்கள் அலைகடலென ஆர்பரித்து திரண்டு வந்து அனைத்து நிகழ்வுகளிலும் தவறாமல் கலந்து கொண்டு கழகத்தலைவர், முதல்வர் தளபதி அவர்களின் வருகையை வரவேற்போம்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டப் பேரவை உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல் மாவட்டம் – ஆத்தூர் ஒன்றியத்தில்

# 26 பயனாளிகளுக்கு ரூ.16.92 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்!

நிலக்கோட்டை, ஜூன் 24:

ஆத்தூர் ஒன்றியத்துக் குட்பட்ட தொப்பம் பட்டி, காந்திகிராமம், செட்டியபட்டி ஊராட்சிகளில் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

மாவட்ட வருவாய் கோட்டாட்சிய சக்திவேல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்கு நர் திலகவதி முன்னிலை வகித்தனர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி தலைமை வகித்து தொப்பம்பட்டியில் 8 பய னாளிகளுக்கு ரூ.9,55,800 மதிப்பிலான இலவச வீட்டு மனை பட்டா, செட்டியபட்டியில் 12 பயனாளிகளுக்கு ரூ. 4,26,660 மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனை பட்டா, காந்திகிராமத்தில் 6 பயனாளிகளுக்கு ரூ.3,10,230 மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனை பட்டா என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூ.16.92 லட்சம் மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளை வழங்கி, காந்திகிராமத்தில் மகாத் மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 2023 2024 கீழ் ரூ 27 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

தொடர்ந்து அமைச்சர், பொதுமக்களிடம் முதியோர் உதவித்தொகை, மகளிர் உரிமை தொகை இலவச வீட்டுமனை பட்டா உள்ளிட்டவைகளுக்கான கோரிக்கை மனுக்களை பெற்று பேசியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக எல்லாருக்கும் எல்லாம் என்ற வகையில் எண்ணற்ற திட் டங்களை செயல்படுத்தி அவை கடைக்கோடி மக் களுக்கும் சென்றடையும் வகையில் தொடர்ந்து கண் காணித்து வருகிறார். குறிப்பாகபெண்களுக்காக அரசு நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள விடியல் பயண திட்டம், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், பெண்கள் உயர் கல்வி பயி லுவதை உறுதி செய்வதற் காகபுதுமை பெண்திட்டம் என ஏராளமான திட்டங் கள் செயல் படுத்தப்பட்டு வருகிறார். குடும்ப தலை விகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத் தில் தகுதியான நபர்கள் விடுபட்டிருந்தால் அவர் களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க விரைவில் முகாம்கள் நடத்தி அதில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள் ளனர் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடு கட்ட விரும்புவோர்க்கு வீடுகள் கட்டி தரப்படுகிறது. கிராமங்கள் தோறும் குடிநீர், சாலை, பேருந்து, கழிப்பறை, மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற் றப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் கோரிக் கைகளை நிறைவேற்றிட இந்த அரசு என்றென்றும் தயாராக உள்ளது இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராமன். ராஜேந்திரன். முன்னாள் ஒன்றிய குழு தலைவர் மகேஸ்வரி முரு கேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணா மூர்த்தி, முருகன். முன் னாள் ஊராட்சி மன்ற தலைவர் கருப்பையா. வட்டாட்சியர் முத்துமு ருகன். ஒன்றிய இளைஞ ரணி அமைப்பாள் ராஜ கணேஷ் மாணவரணி அமைப்பாளர் அரவிந் தன், தகவல் தொழிநுட்ட அமைப்பாளர் வாஞ்சி நாதன். சின்னாளபட்டி பேரூர் பொறுப்பாளர் நாககணன் நிர்வாகிகள் கனகராஜ், எஸ்.ஆர் முருகன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



மூத்த பத்திரிகையாளர் சின்னக்குத்தூசி அவர்களின் 91ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 21, 2025 அன்று மயிலாப்பூர் கவிக்கோ அரங்கில் திராவிட இயக்கச் சிந்தனையாளர் திருச்சி செல்வேந்திரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், 1 லட்ச ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது. விருதினை தமிழ்த் தேசிய இயக்க நிறுவனரும், மூத்த அரசியல்வாதியுமான பழ.நெடுமாறன் வழங்கிக் கௌரவித்தார். விழாவுக்கு திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசர் தலைமையேற்க, விழாவில் பங்கேற்கவந்த அனைவரையும் நக்கீரன் ஆசிரியர் நக்கீரன் கோபால் வரவேற்றுப் பேசினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டட அடிக்கல் நாட்டு விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று தொடங்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.ஜெ.மணிக்கண்ணன் (உளுந்தூர்பேட்டை), தா.உதயசூரியன் (சங்கராபுரம்), வசந்தம் க. கார்த்திகேயன் (ரிஷிவந்தியம்) உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.